DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 154/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : அண்ணாத்துரை ( மருத்துவர்) (PW. 10)
Father/Husband Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of August 2026

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் முதுநிலை குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 27.06.2023ம் தேதியன்று அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது காலை 11.10 மணியளவில் புளியாண்டார்கோட்டையைச் சேர்ந்த 35 வயது மதிக்கத்தக்க மாரி என்பவரை அவரது கணவர் வேலு என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 3 நபர்கள் புளியாண்டார்கோட்டை வாட்டர் டேங்க் அருகே வைத்து கைகளால் தாக்கியதாக கூறினார். அவர் திருச்சுழி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்கு வந்ததாக கூறினார். மேற்படி காயம்பட்ட நபரை உள்நோயாளியாக சிகிச்சை அளித்து சிகிச்சையின் முடிவில் அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று நான் வழங்கிய

காயச்சான்றுதான். (**அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பதிவேடுகளில் உள்ள அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது.**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

மாரி என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது தன்னை தாக்கிய நபர்கள் ஆண்களா அல்லது பெண்களா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் எப்போது நடைபெற்றது என்று என்னிடம் கூறினாரா என்றால் 26.06.2023ம் தேதி மாலை 6.00மணியளவில் நடைபெற்றதாக கூறினார். அவருக்கு வெளிப்படையான காயங்கள் இருந்ததா இல்லை என்றால் தலையின் பின்பகுதியில் லேசான ரத்தக்கட்டு இருந்தது, மேலும் வயிறு வலிப்பாக கூறினார். வயிறுவலி நடிப்பாக இருக்கலாம் என்றால் சரிதான். ஒரு நபர் உட்காரும்போது தன்னிச்சையாக சுவற்றில் இடித்தால்கூட காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் உள்ளது.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 154/2024**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

Name : காமாட்சிபாண்டியன் ( மருத்துவர்) (PW. 9)
Father/Husband Name :
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of August 2026

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை –**

நான் தற்போது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் பொறுப்பு தலைமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 26.06.2023ம் தேதியன்று திருச்சுழி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது இரவு 11.50 மணியளவில் புளியாண்டார்கோட்டையைச் சேர்ந்த 35 வயது மதிக்கத்தக்க மாரி என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 3 பெண்கள் தன்னை அன்று மாலை 6.00மணியளவில் கையால் புளியாண்டார் கோட்டை நாடக மேடை அருகே தாக்கியதாக கூறினார். மேலும் அவர் வீரசோழன் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதலுதவி சிகிச்சை பெற்றதாகவும் கூறினார். அவரை பரிசோதித்தபோது வெளிகாயங்கள் எதுவும்இல்லை. தலைவலி இருப்பதாக கூறினார். அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதித்தேன். மறுநாள் பணிக்கு வந்த மருத்துவர் மேல்சிகிச்சைக்காக அருப்புக்கோட்டை மருத்துவமனைக்கு

அனுப்பி வைத்துள்ளார். அருப்புக்கோட்டை மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை முடித்து அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று கருத்துரை பெற்று மாரி என்பவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்று வழங்கினேன்.( **விபத்துபதிவேட்டுன் கூடிய காயச்சான்று அசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

மாரி என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வரும்போது ஆண்கள் தாக்கியதாக கூறவில்லை என்றால் சரிதான், பெண்கள் என்று குறிப்பிட்டு கூறினார். சம்பவம் எப்போது நடைபெற்றது என்று என்னிடம் கூறினாரா என்றால் 26.06.2023ம் தேதி மாலை 6.00மணியளவில் நடைபெற்றதாக கூறினார். அவருக்கு வெளிப்படையான காயங்கள் இருந்ததா இல்லை என்றால் இல்லை. தலையில் வலி இருப்பதாக என்னிடம் கூறினாரா என்றால் ஆமாம். தலைவலி நடிப்பாக இருக்கலாம் என்றால் சரிதான். வீரசோழன் ஆரம்ப சுகாதார மருத்துவமனையில் விபத்து பதிவேடு வழங்கப்பட்டதா என்றால் ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்து பதிவேடு கொடுக்கமாட்டார்கள். அசா1 எதிரிகள் மீது வழக்கு போடவேண்டும் என்ற நோக்கத்தில் திட்டமிட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்திற்காக மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.